# <u>ADM COURT, SANKARANKOVIL</u>

**தேதி 13.10.2022**

**அசல் வழக்கு எண்.<u>87/2014</u>**

**<u>பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சென்டரிங் வேலை செய்து வருகிறேன். நான் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணம் 1ம்-வாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் அசல் ஆவணத்தை வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சாஆ. 5 வீட்டுவரி ரசீதுகள் என் வீட்டிற்கான வரி ரசீதுகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 வரி ரசீதை வைத்து எனக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்று தீர்மானிக்க முடியும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 வரி ரசீதுகள் இவ்வழக்கிற்கு தொடர்ப்பற்ற ஆவணம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனக்கும் வாதிகளுக்கும் நடைபாதைக் குறித்து நீள மற்றும் அகலத்தைப் பொறுத்துதான் பிரச்சனை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 விஜயராணி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்திற்கும் வழக்குச்சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் பத்திரத்தில் பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு இரண்டு வீடுகள் உள்ளது. எனது வீடுகள் உள்ள இடத்திற்கான சர்வே எண்கள் எனக்கு தெரியாது. எனது இரண்டு வீடுகளுக்கான ஆவணங்களை தாக்கல் செய்தால்தான் எனக்கு எவ்வளவு நீள அகலம் கொண்ட சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பது தெரியவரும்

என்றால் சரிதான். நான் என்னுடைய பத்திரங்களை வங்கியில் கடன் பெற்ற போது தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வீட்டிற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விவரங்கள் தெரியவந்துவிடும் என்பதால் நான் என்னுடைய ஆவணங்களை தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**